பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 05 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை 5ஆம் கட்ட தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

2. மக்களவையின் 3ஆம் கட்ட தேர்தலுக்கான இறுதிக்கட்ட தீவிரப் பிரச்சாரத்தில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

3. இந்தியா - இந்தேனேஷியா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

4. சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் சாலையில் ஏற்பட்ட பள்ளத்தில் வாகனங்கள் விழுந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 48ஆக அதிகரித்துள்ளது.

5. ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jadumani Singh**, **Nikhil**, **Ajay Kumar**, **Ankush** ஆகியோர் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

மக்களவை 5ஆம் கட்ட தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

வேட்புமனு மீதான பரிசீலனை நாளை நடைபெறும். மனுக்களை திரும்ப பெற வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும்.

பீஹார், ஜார்கண்ட், மஹாராஷ்டிரா, ஒடிசா, உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்கள் மற்றும் ஜம்மு-கஷ்மீர், லடாக் ஆகிய யூனியன்பிரதேசங்களில் இடம்பெற்றுள்ள 49 தொகுதிகளில் இம்மாதம் 20ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலுக்கான 3ஆம் கட்ட வாக்குப்பதிவு இம்மாதம் 7ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் இறுதிக்கட்ட தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, குஜராத் மாநிலம், ஆனந்த், சுரேந்திரநகர், ஜாம்நகர் ஆகிய இடங்களில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்தபிறகு சர்வதேச விவகாரங்களில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

நாடு முழுவதும் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் தமது அரசு கவனம் செலுத்தி அமைதியை நிலைநாட்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையே காங்கிரஸ் மூத்த தலைவர்களின் ஒருவரான திரு. அசோக் கெலாட் அகமதாபாதில் செய்தியாளர்களிடம் பேசினார்.

அனைத்து தரப்பினருக்கும் சமமான நீதி என்பதற்கு தமது கட்சியின் தேர்தல் அறிக்கையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஏழைகளின் நலன் பாதுகாக்கப்படும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் ஷிவ்மோகாவில் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தியுடன் இணைந்து அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரசால் மட்டுமே அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்படும் என்று திரு. மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

**Koppal** மாவட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி தலைவர்களின் ஒருவரான திரு. நாராயணசாமி, ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் நலனுக்காக பிஜேபி அரசு எப்போதும் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

பீஹாரில் அராரியா மற்றும் முசாஃபர்புர் பகுதிகளில் பிஜேபி மூத்த தலைவர் திரு. ஜேபி. நட்டா பிரச்சாரம் மேற்கொண்டார்.

மற்றொரு மூத்த தலைவர் திரு. ராஜ்நாத் சிங், **Chapra, Supaul** பகுதிகளில் பிரச்சாரம் செய்தார்.

கடந்த ராஷ்ட்ரிய ஜனதாதள ஆட்சியினால் மக்கள் இன்றும் அச்சமடைந்துள்ளதாக கூறினார்.

சமஸ்திபுர், **Saharsa, Harariya** ஆகிய இடங்களில் வாக்கு சேகரித்த ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், அரசியலமைப்புச் சட்டம் மற்றும் இடஒதுக்கீட்டில் மாற்றங்களைக் கொண்டு வருவதை பிஜேபி மறைமுக நோக்கமாகக் கொண்டுள்ளது என்று குற்றம் சாட்டினார்.

சத்தீஸ்கரில் கோர்பா மக்களவைத் தொகுதிக்குட்பட்ட **Chirmiri** நகரில் வாக்கு சேகரித்த காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, சத்தீஸ்கர் மாநில மக்களின் நலனுக்காக முந்தைய காங்கிரஸ் அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாகப்பட்டினம் – இலங்கையின் காங்கேசன்துறை இடையே படகுப் போக்குவரத்து விரைவில் மீண்டும் தொடங்கும் என்று இலங்கைக்கான இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மட்டக்களப்பு பகுதியில் நிகழ்ச்சி ஒன்றில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா – இலங்கை இடையேயான போக்குவரத்திற்காக பாலம் கட்டுவது தொடர்பாக இரு நாட்டு அரசுகளும் இணைந்து செயல்பட்டு வருவதாக கூறினார்.

இது தொடர்பான முதல் சுற்றுப் பேச்சுகள் நிறைவடைந்துள்ளதாகவும், இத்திட்டம் குறித்த விரிவான அறிக்கை வெளியிடப்படும் என்றும் இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஜா குறிப்பிட்டார்.

இதற்கிடையே நாகப்பட்டினம் – காங்கேசன்துறை இடையேயான படகுப் போக்குவரத்து இம்மாதம் 13ஆம் தேதி தொடங்கும் என்று இலங்கை துறைமுக ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஷார்ஜா வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு பிரதிநிதிகள் நாளை மறுநாள் முதல் 10ஆம் தேதி வரை இந்தியாவில் பயணம் மேற்கொள்கின்றனர்.

அப்போது இந்தியா – ஷார்ஜா இடையே புதிய முதலீட்டுக்கான வாய்ப்புகள், பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

சென்னை, மும்பையைச் சேர்ந்த வர்த்தக பிரதிநிதிகளுடனும் அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

தொழில்முனைவோர் உடனான சந்திப்பு, நிறுவனங்களுக்கு நேரடி பயணம் உள்ளிட்டவையும் அவர்களுடைய பயணத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

தற்போது 18 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் ஷார்ஜாவில் செயல்பட்டு வருவது இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை பிரதிபலிக்கிறது.

<<<<>>>>

சென்னையில் மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி, மயிலாப்பூர் ராணிமேரி கல்லூரி, கிண்டி அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய பகுதிகளில் அடுத்த மாதம் 4ஆம் தேதி வரை ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சந்தீப்ராய் ரத்தோர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தடையை மீறி ட்ரோன்களை பறக்கவிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா - இந்தேனேஷியா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. கிரிதர் அரமானே, இந்தோனேஷிய பாதுகாப்பு அமைச்சக தலைமைச் செயலாளர் திரு. டோனி எர்மவான் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

பரஸ்பரம் இரு நாடுகளும் ஆர்வமுடைய பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் இருநாட்டுப் பிரதிநிதிகளும் கருத்துகளை பரிமாறிக்கொள்ள உள்ளனர்.

அத்துடன் இருநாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்படுகிறது.

<<<<>>>>

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் சாலையில் ஏற்பட்ட பள்ளத்தால் வாகனங்கள் விழுந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 48ஆக அதிகரித்துள்ளது.

30க்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக அப்பகுதியில் கனமழை பெய்த நிலையில் நேற்று பிற்பகல் அங்கு நிலச்சரிவு ஏற்பட்டது.

இதன் காரணமாக சாலையில் ஏற்பட்ட பள்ளத்தில் 20க்கும் மேற்பட்ட வாகனங்கள் விழுந்து அவற்றில் சில வாகனங்கள் தீப்பிடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கேரளாவில் அதிகரித்து வரும் வெப்பம் காரணமாக கல்வி நிலையங்களுக்கு வரும் திங்கட்கிழமை வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் தலைமையில் நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்கள் காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே ஆலப்புழா, பாலக்காடு, திரிச்சூர், கோழிக்கோடு ஆகிய மாவட்டங்களில் இன்று கடும் வெப்பம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த 3 மாவட்டங்களிலும் மஞ்சள்நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுளளது.

அதிகபட்சமாக பாலக்காடு மாவட்டத்தில் 40 டிகிரி செல்சியஸ் அளவிற்கும், கொல்லம், திரிச்சூர், கோழிக்கோடு மாவட்டங்களில் 39 டிகிரி செல்சியஸ் அளவிற்கும் வெப்பநிலை பதிவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jadumani Singh**, **Nikhil**, **Ajay Kumar**, **Ankush** ஆகியோர் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 51 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Jadunani Singh** – பூடானின் **Phuntsho Kinley**-வையும், 57 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Nikhil,** உஸ்பெகிஸ்தானின் அயூப் கானையும் வென்றனர்.

63 புள்ளி 5 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அஜய்குமார் மங்கோலியாவின் **Dindorj**-வையும், 71 கிலோ எடைப்பிரிவு காலிறுதியில் **Ankush,** கொரியாவின் **Lee Ju Sang**-யும் வென்றனர்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி ஒரு ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக நிதிஷ் குமார் ரெட்டி 42 பந்துகளில் 76 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி, 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 200 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

அதிகபட்சமாக ரியான் பராக் 49 பந்துகளில் 77 ரன் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் ஹைதராபாத் அணி புள்ளிப் பட்டியலில் 4ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ராஜஸ்தான், கொல்கத்தா மற்றும் லக்னோ அணிகள் முறையே முதல் 3 இடங்களில் உள்ளது.

சென்னை அணி 5ஆம் இடத்தில் உள்ளது.

இன்று நடைபெற உள்ள போட்டியில் மும்பை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – போர்ச்சுகலின் கேப்ரல் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-0 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Dessi – Sanna** இணையை வென்றது.

**<<<<The End>>>>**